## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## EDUS 4104 கல்வி உளவியலில் உயர்தரக் கோட்பாடுகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) பியாஜே கூறும் உளவளர்ச்சிப் பருவங்களைக் குறிப்பிட்டு அதில் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தில் தோன்றும் உள வளர்ச்சி நிலைகள் பற்றிக் கருத்துரைக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ) உள-சமூக விருத்தி பற்றிய எரிக்சனின் கருத்துக்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(13 புள்ளிகள்)

02.(அ) "சூழலுடன் பொருத்தப்பாடு பெறுவதைத் தீர்மானிக்கும் ஒருவனுடைய உள்ளார்ந்த அமைப்பே ஆளுமையாகும்." இக்கூற்றினை உதாரணங்கள் தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) இயல்பூக்கம் என்றால் என்ன? மக்டுகல் கூறும் இயல்பூக்கக் கொள்கையினை எவ்வாறு ஓர் ஆசிரியர் தனது வகுப்பறையில் மாணவர்களின் இயல்பூக்கங்களை விருத்தி செய்வதற்குப் பிரயோகிக்க முடியும் என்பதை உதாரணங்காட்டி ஆராய்க?

(15 புள்ளிகள்)

03.(அ) சிக்மன்ட் புரொய்ட் நனவிலி நடத்தை, நனவிலி ஊக்கல் தொடர்பாகக் கூறிய கருத்துக்களை அவரது உளப்பகுப்புக் கொள்கையுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) மாஸ்லோவின் தேவைக்கொள்கையில் கூறப்பட்ட விடயங்களை ஆசிரியர் எவ்வாறு தனது கற்றல் கற்பித்தலில் பிரயோகிக்கலாம். வகுப்பறைக் கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(12 புள்ளிகள்)

04.(அ) முயன்று தவறிக் கற்றல் என்பதை தோண்டைக்கின் S-R இணைப்புக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க?

(13 புள்ளிகள்)

(ஆ) மீளவலியுறுத்தலின் அளவுத்திட்டங்கள் தொடர்பான ஸ்கின்னரின் கருத்துக்களை பாடசாலைச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி விளக்குக?

(12 புள்ளிகள்)

(ம.ப.பா)

05.(அ) குத்ரி (E.R Guthrie) என்பவரின் அடுத்தமைவுக் கொள்கையின் கல்விசார் பயன்பாடுகளை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ) உயிரியின் துலங்கல் உடனடியாக மீளவலியுறுத்தப்படும் அத்துலங்கலின் முழுமையான கற்றல் ஏற்படும் போதுதான் எனும் கருத்தினை பாடசாலைகளில் பிள்ளைகளை மையமாகக் கொண்டு ஆராய்க?

(13 புள்ளிகள்)

06.(அ) பின்வரும் விடயங்களை பவ்லோவின் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i. $S_1$ – நிபந்தனைப்படுத்தப்படாத தூண்டி
ii. $S_2$– நிபந்தனைப்படுத்தப்படும் தூண்டி
iii. $S_1$–R-நிபந்தனைப்படுத்தப்படாத (இயற்கையான) இணைப்பு
iv. $S_2$–R-நிபந்தனைப்படுத்தப்பட்ட (செயற்கையான) இணைப்பு

(4X4=16 புள்ளிகள்)

(ஆ) கற்றல் என்பது புலக்காட்சியை அமைப்பாக்கி, அகக்காட்சி பெறுதல் என்னும் செயன்முறைகளைக் கொண்டது என்பதற்கு கெஸ்ரால்ட் உளவியலாளர்கள் கூறும் விளக்கத்தினை ஆராய்க?

(09 புள்ளிகள்)